# அவசரநிலைகளிற்கு முன்னேற்பாடு செய்தல்

**ஆயத்தமாகவிருங்கள்... ஒரு திட்டத்தை வைத்திருங்கள்.**

ஒரு அவசரம் ஏற்படமுன்பும், நிகழும்பொழுதும், முடிவடைந்தபின்பும் செய்யவேண்டியவை என்ன என்பதை உங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் அறிந்திருப்பதை உறுதிப்படுத்துங்கள். நீங்கள் எவ்வாறு ஒரு அவசரத்திற்கு உத்தமமாக முன்னேற்பாடு செய்யலாம் என்பதை கலந்தாலோசிப்பதற்கு ஒரு குடும்ப சந்திப்பை ஒழுங்குபடுத்துங்கள். ஒரு திட்டத்தை வைத்திருங்கள். நீங்கள் தனியே வசிப்பதாகவிருப்பின், அண்டைவீட்டார் மற்றும் நண்பர்களுடன் இணைப்புகள் கொண்ட ஒரு திட்டத்தை உங்களுக்கென உருவாக்குங்கள்.

**நெருக்கடிநிலை தொலைபேசி இலக்கங்ளை சுலபமாய் அடையக்கூடிய இடத்தில் வையுங்கள்**

முக்கியமான தொலைபேசி இலக்கங்களின் ஒரு பட்டியலை தொலைபேசியினருகே வைத்திருங்கள். அவசர சூழ்நிலையொன்றின் பொழுது, தொலைபேசியை அவசர அழைப்புகளிற்கு மட்டும் உபயோகியுங்கள். ஒரு அவசரத்தின் பொழுது நீங்கள் பிரிவடைந்துவிட்டால் உங்கள் குடும்பத்தின் தொடர்பு நபராக இருப்பதற்கென வேறோர் பகுதியில் வசிக்குமொரு நபரை தேர்ந்தெடுங்கள். எல்லா வேளைகளிலும் இந்நபரின் பெயரும் தொலைபேசி இலக்கமும் அனைவரிடமும் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.

## இல்ல தப்பிப்பு திட்டமொன்றை உருவாக்குங்கள்

உங்கள் இல்லத்தின் நில உருவரைப்படமொன்றை வரைவதன் மூலம் ஒரு தப்பிப்பு திட்டத்தை உருவாக்குங்கள். நீல அல்லது கறுப்பு பேனையைப் பாவித்து, கதவுகள், யன்னல்கள், படிக்கட்டுகள், மற்றும் பெரிய தளபாடங்களின் அமைவிடங்களை காட்டுங்கள். ஒவ்வொரு மாடியிற்கும் தனி பக்கமொன்றை பாவியுங்கள். அவசர தேவைப்பொருட்கள், தீயணைக்கும் கருவிகள் (கார்பன் டையொக்சைட்டு நிறைந்த குடவை), புகை எச்சரிக்கைக்காட்டிகள், மடிக்கக்கூடிய ஏணிகள், முதலுதவி பெட்டிகள், மற்றும் மின்சார அணைப்பு ஸ்தானங்கள் என்பனவற்றின் அமைவிடங்களை குறிப்பிடுங்கள். அடுத்து, ஒரு நிறப் பேனையைப் பாவித்து, ஒவ்வொரு அறையிலிருந்தும் இரண்டு வெளியேற்ற பாதைகளையாவது உடைந்த கோடுகளால் காட்டுங்கள். கடைசியாக, நெருக்கடியொன்று ஏற்பட்டவிடத்தில் இல்ல அங்கத்தவர்கள் சந்திக்கவேண்டிய வீட்டின் வெளியேயுள்ள ஓரிடத்தைக் குறிப்பிடுங்கள்.

நீங்கள் மாடிவீட்டு கட்டிடமொன்றில் வசிப்பதாயின், உங்கள் குடும்பத்தின் அனைவரிற்கும் நெருக்கடிநிலை வெளியேற்றவழியினை கண்டுபிடிக்குமிடத்தை காட்டுங்கள். நெருப்பு எச்சரிக்கைக்காட்டியின் அமைவிடத்தைக் காட்டுவதுடன், எப்பொழுது, எவ்வாறு அதைப் பாவிப்பது என்பதையும் விளக்குங்கள். தீ அல்லது வேறு நெருக்கடியின் பொழுது ஒருபோதும் மின்னுயர்த்தியை (லி∴ப்ட்) உபயோகிக்காதீர்கள்; மின்சக்தியற்ற சமயத்தில் அவை செயற்பாடடையாமலிருக்கக்கூடும். மாடிவீட்டு கட்டிட பாதுகாப்பினைப்பற்றிய மேலதிக தகவல்களிற்கு உங்கள் உள்ளூர் தீ மற்றும் நெருக்கடிநிலை சேவைகளுடன் தொடர்புகொள்ளுங்கள். வருடத்திற்கு இரு தடவையாவது அனைத்து இல்ல அங்கத்தவர்களுடனும் அவசரநிலை வெளியேற்றல் திட்டங்களை பயிற்சி செய்யுங்கள். உங்கள் இல்ல தப்பிப்பு திட்டத்தை குழந்தைப்பராமரிப்பாளர்களும் பிள்ளைகளும் காணக்கூடிய இடத்தில் வையுங்கள். இல்ல தப்பிப்பு திட்டமொன்றை உருவாக்க மேலதிக தகவல்களிற்கு உங்கள் உள்ளூர் தீ மற்றும் நெருக்கடிநிலை சேவைகள் - தீ தவிர்ப்புப் பிரிவுடன் தொடர்புகொள்ளுங்கள்.

## ஒரு குடும்ப அவசரநிலைப் பெட்டியை தயார்செய்யுங்கள்

ஒரு நெருக்கடியின் பொழுது நீங்கள் உங்கள் இல்லத்திலிருந்து வெளியேற்றப்பட்டாலோ இல்லத்தினுள்ளே கட்டுப்படுத்தப்பட்டாலோ ஒரு அவசரநிலைப் பெட்டி உங்கள் குடும்பத்திற்கு அத்தியாவசியமான பொருட்களை வழங்கும். இந்த அவசரநிலைப் பெட்டியானது 3 நாட்களிற்கு அளவான தேவைப்பொருட்களை கொண்டிருத்தல் அவசியமாகும். குடும்ப அவசரநிலைப்

பெட்டியின் அமைவிடத்தை அனைவரும் அறிந்திருப்பதை உறுதிப்படுத்துங்கள். அவசரநிலைப் பெட்டி பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

- மருந்துகள் மற்றும் முதலுதவிப் பொருட்கள்
- நீர்
- பழுதடையமாட்டாத உணவு
- கைவிளக்குகள் மற்றும் மின்கலங்கள்
- போர்வைகள் மற்றும் உடல்வெப்பநிலையை பேணக்கூடிய ஆடைகள்

மேலதிக தகவல்களுக்கு அல்லது உங்கள் சமூக ஸ்தாபனத்திற்கு ஒரு விளக்கக்காட்சியை பதிவுசெய்வதற்கு 905-874-2911 இனை அழையுங்கள்.